முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1251

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.03.2023,** வெள்ளிக்கிழமை

1. தர்மலோகம் படைக்க வேண்டி
   தவபலத்தை கலியுகத்தில் அவதாரமாக்கி
   பெருமைமிக்க ஆறுமுகன் என் சூட்சுமமாக
   பிரணவக்குடில் படைத்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 19 ம் நாள் 03.03.2023, வெள்ளிக்கிழமை)
   வரமென கலியுக மக்களுக்கு
   வள்ளல் தன்மையை ஞான நெறியாக வழங்கி
3. வழங்கியே உலகோரெல்லாம்
   வரம்பெற்று உன்னால் உயரவேண்டி
   அறமோடு ஞானம் தருகின்ற
   அரங்கனே கலியுகத்தின் ஞானியே
4. ஞானியே உந்தன் சக்திவழி
   ஞானயுகமே அமைவது உறுதிஉறுதி
   ஞானியே உன் தர்மத்தின் வழி
   ஞானவான்களாக உலகோர் மாறுவதும் உறுதிஉறுதி
5. உறுதிதந்து அரங்கன் உன் சக்திக்குள்
   உயர்வாக ஆறுமுகன் யானிருந்து இயக்குகின்றேன்
   கருதி வந்து உலகோர் உன்வழி
   கட்டாயம் சரணாகதி கொண்டுவிட்டால்
6. கொண்டுவிட உலகமே ஞானவான்கள் படை
   குறைவின்றி நிரம்பி எங்கும் ஞான ஆட்சி
   தர்மவான் உன் தலைமை ஏற்ற வண்ணம்
   தக்கதொரு ஞானிகள் ஆட்சியாகவும்
7. ஆகவே இந்த உலகம் மாற்றம் பெறும்
   அந்த அற்புதத்தை ஆறுமுகன் யான் உன் அறத்தை கொண்டும்
   ஆற்றல்மிக்க உன் அடியவர்களைகொண்டும்
   அரங்கன் உன் நாமஜெபத்தை முழங்கிக்கொண்டே
8. முழங்கிக்கொண்டே இந்த உலகமெல்லாம்
   முழுமைபட சூட்சுமமாய் யானே
   இந்த மாற்றத்தை நடத்துவேன்
   ஞானிகள் ஆட்சியாகத் தந்து உலகை பாதுகாப்பேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–